| A–9965 |
|---|

| Sub. Code |
|---|
| 4BCO3C4 |

**B.Com. DEGREE EXAMINATION, APRIL 2021 &**

**Supplementary/Improvement/Arrear Examinations**

**Third Semester**

**Commerce**

**ADVANCED ACCOUNTANCY — III**

**(CBCS – 2014 onwards)**

Time : 3 Hours — Maximum : 75 Marks

**Part A** $(10 \times 2 = 20)$

Answer **all** questions.

1. What is meant by Partners Capital Accounts?

   கூட்டாளிகள் மூலதன கணக்கு என்றால் என்ன?

2. What is Current account?

   நடப்பு கணக்கு என்றால் என்ன?

3. What is meant by Goodwill?

   நற்பெயர் என்றால் என்ன?

4. What is meant by revaluation Accounts?

   மறு மதிப்பீடு கணக்கு என்றால் என்ன?

5. What is meant by Gaining Ratio?

   ஆதாய விகிதம் என்றால் என்ன?

6. What is JLP?

JLP என்றால் என்ன?

7. What is realization account?

தீர்வு கணக்கு என்றால் என்ன?

8. What are the accounts prepared at the time of dissolution?

நிறுவனம் கலையும்பொழுது என்னென்ன கணக்குகள் தயாரிக்கப்படுகிறது?

9. What is meant by conversion of firm in to a company?

கூட்டு நிறுவனம் கம்பெனியாக மாற்றப்படுதல் என்றால் என்ன?

10. What is meant by maximum loss method?

அதிக நட்டமுறை என்றால் என்ன?

**Part B** $(5 \times 5 = 25)$

Answer **all** questions.

11. (a) What do you mean by Profit and Loss appropriation account?

இலாப நட்ட பகிர்வு கணக்கு பற்றி நீவிர் அறிவது என்ன?

Or

(b) A and B are partners sharing profits and losses in the ratio of 3 : 2. They admit C for $1/5^{th}$ share in the profit. Calculate the new profit sharing ratio.

அ மற்றும் ஆ கூட்டாளிகள் தங்களது இலாபத்தை 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கிறார்கள். இ என்பவர் 1/5 பங்கு லாபத்திற்கு சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய புதிய இலாப விகிதத்தை கணக்கிடுக.

12. (a) Enumerate the adjustments to be made before admitting a new partner in the firm.

ஒரு புதிய கூட்டாளியை ஒரு நிறுவனத்தில் சேர்க்கும்போது பின்பற்ற வேண்டிய சரிகட்டுதல்களை விளக்குக.

Or

(b) Kalavathi and Malathi are partners sharing profits in the ratio of 4 : 3. Leelavathi is admitted for 1/3rd share of profits. Goodwill of the firm is to be valued at 2 years purchase of 3 year's profits which have been Rs. 44,000, Rs. 56,000, Rs. 68,000. Give Journal entries if

(i) There is no goodwill in the books of the firm

(ii) The goodwill account appears at Rs. 28,000

(iii) The goodwill already existing in the books of Rs. 1,68,000.

கலாவதி, மாலதி என்ற கூட்டாளிகள் முறையே 4 : 3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். லீலாவதி என்பவரை 1/3 கூட்டுக்குச் சேர்த்துக் கொண்டனர். நற்பெயர் மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக்கொண்டு மதிப்பிடப்பட்டது. மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ரூ. 44,000 ரூ. 56,000, ரூ. 68,000 ஆகும்.

கீழ்க்காணும் தருணங்களின் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

(i) நற்பெயர் இதுவரை ஏடுகளில் இல்லாமலிருந்தால்

(ii) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ. 28,000 எனக் காட்டப்பட்டிருந்தால்

(iii) ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ. 1,68,000 எனக் காட்டப்பட்டிருந்தால்

13. (a) (i) Distinction between sacrificing ratio and gaining ratio – Explain.

(ii) Distinguish between Revaluations Account and Realisation Account – Explain.

(i) தியாக விகிதத்திற்கும் மற்றும் ஆதாய விகிதத்திற்கும் இடையேயான வேற்றுமைகளை விளக்குக.

(ii) மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் தீர்வுக் கணக்கு இரண்டிற்கும் இடையேயான வேற்றுமைகளை விளக்குக.

Or

(b) A, B, C were partners sharing profits and losses in the ratio of 3 : 2 : 1 respectively. B died on 31st march 2003. The profits from 1.1.2003 to 31.3.2003 amounted to 4,500. A and B decided to share the future profits in the ratio of 3 : 2 respectively with effect from 1.4.2003. Give the necessary journal entries to record the B's share of profit to the date of death.

அ, ஆ, இ ஆகிய கூட்டாளிகள் முறையே 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாப - நட்டங்களை பகிர்ந்தனர். 31 மார்ச் 2003ல் ஆ இறந்தார். 1.1.2003 முதல் 31.3.2003 வரையிலான இலாபம் ரூ. 4,500 ஆகும். 1.4.2003 முதல் அ மற்றும் ஆ ஆகிய கூட்டாளிகளின் எதிர்கால இலாபம் முறையே 3 : 2 என்ற விகிதத்தில் இருக்குமாறு முடிவு செய்தனர். கூட்டாளி 'ஆ' இறந்த நாளில் அவருக்கான இலாப பங்கை குறிப்பேடு தயாரித்து பதிக.

14. (a) Explain the provisions of settlement of accounts of partners in case of dissolution.

நிறுவனம் கலைக்கப்படும் பொழுது கணக்கை முடிவு செய்யும் பொழுது காணும் சரத்துக்களை விவரிக்கவும்.

Or

(b) A, B and C commenced business on 1.1.2011 with capitals of Rs. 2,00,000, Rs. 1,60,000 and Rs. 1,20,000 respectively. Profit and losses were shared in the ratio of 4 : 3 : 3. Capital carried interest at 5% p.a. During 2011 and 2012, they made profits of Rs. 80,000 and Rs. 1,00,000 (before allowing interest on capitals). Drawing of each partner were Rs. 20,000 per year. On 31.12.2012, they firm was dissolved creditors on that date were Rs. 48,000. The assets realised Rs. 5,20,000 (Net).

Prepare Realisation account.

1.1.2011 அன்று அ, ஆ மற்றும் இ முறையே ரூ. 2,00,000, ரூ. 1,60,000 மற்றும் ரூ. 1,20,000 முதலீடு செய்ய வியாபாரம் துவங்கினர். இலாப நட்டத்தை 4 : 3 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொண்டனர். முதல் மீது வட்டி ஆண்டிற்கு 5% ஆகும். 2011 மற்றும் 2012 ஆண்டுகளில் அவர்கள் முதல் மீது வட்டிக்கு முந்தைய இலாபம் ரூ. 80,000 மற்றும் ரூ. 1,00,000 ஈட்டினர். ஒவ்வொரு கூட்டாளியின் எடுப்பு ஆண்டிற்கு ரூ. 20,000 ஆகும். 31.12.2012 அன்று நிறுவனம் கலைக்கப்பட்டது. அன்றைய தேதியில் கடனீந்தோர்கள் மதிப்பு ரூ. 48,000 சொத்துக்கள் ரூ. 5,20,000 (நிகர)க்கு விற்பனை செய்யப்பட்டது. தீர்வுக் கணக்கை தயார் செய்க.

15. (a) Explain the procedure for selling the business of a partnership to a limited company.

ஒரு கூட்டாண்மைத் தொழிலை ஒரு வரையறு நிறுமத்திற்கு விற்பனை செய்யும்போது பின்பற்ற வேண்டிய முறைகளை விளக்குக.

Or

(b) Kamala, Vimala and Gokila were sharing profits and losses in the ratio of 3 : 2 : 1 respectively as partners. They decided to dissolve the firm on 30th June 2008. The Balance Sheet on that date were as under :

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Capital | | Fixed assets | 60,000 |
| Kamala | 25,000 | Current assets | 40,000 |
| Vimala | 25,000 | | |
| Gokila | 15,000 | | |
| Creditors | 35,000 | | |
| | 1,00,000 | | 1,00,000 |

All the assets were realised Rs. 85,000, that amount realised in first instalment Rs. 35,000, in second instalment Rs. 25,000 and in third instalment Rs. 25,000.

Show the statement showing distribution of cash under proportionate capital method.

கமலா, விமலா மற்றும் கோகிலா ஆகிய கூட்டாளிகள் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் லாப நட்டங்களை பகிர்ந்து கொள்கிறார்கள். ஜூன் 30 2008ல் அவர்கள் நிறுவனத்தை கலைப்பதற்கு முடிவு செய்தனர். அதே நாளன்று உள்ள இருப்பு நிலைக் குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | | நிலையான சொத்துக்கள் | 60,000 |
| கமலா | 25,000 | நடப்புச் சொத்துக்கள் | 40,000 |
| விமலா | 25,000 | | |
| கோகிலா | 15,000 | | |
| கடனீந்தோர் | 35,000 | | |
| | 1,00,000 | | 1,00,000 |

அனைத்து சொத்துக்களின் விற்பனையால் கிடைக்கப் பெற்ற தொகை ரூ. 85,000 ஆகும். முதல் தவணையில் ரூ. 35,000மும் இரண்டாவது தவணையில் ரூ. 25,000. ரொக்க பங்கீட்டினை காண்பிக்கும் பட்டியலை விகிதாச்சார மூலதனமாக்க பங்கீட்டு முறையில் தயாரிக்க.

**Part C** (3 × 10 = 30)

Answer any **three** questions.

16. Praveen and Ravi enter into a partnership on 1st January 2009 contributing Rs. 30,000 and Rs. 20,000 respectively as capital. They agree to share profit in the ratio of 2 : 1. Praveen is to be allowed a salary of Rs. 3,600 and Ravi Rs. 2,400 per year. 6% interest is payable on capital. Interest on drawings is 6% p.a. During the year Praveen withdraws Rs. 4000 and Ravi Rs. 3,000. Profit in 2009 before making adjustments for the above items is Rs. 14,790. Show how the profit will be distributed. Also show the capital accounts of partners under fluctuating capital method.

1 ஜனவரி 2009 அன்று பிரவீன் மற்றும் ரவி முறையே ரூ. 30,000 மற்றும் ரூ. 20,000ஐ முதலாக செலுத்தி கூட்டாண்மையில் ஒப்பந்தம் செய்தனர். அவர்கள் இலாபத்தை 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள ஒப்புக் கொண்டனர். ஒரு ஆண்டிற்கு ஊதியமாக பிரவீனுக்கு ரூ. 3,600ம் ரவிக்கு ரூ. 2,400 வழங்கப்படவேண்டும். 6% முதல் மேல் வட்டியாக செலுத்தப் படவேண்டும். எடுப்புகளின் மீதான வட்டி வருடத்திற்கு 6% ஆகும். அந்த ஆண்டில் பிரவீன் ரூ. 4,000-த்தையும், ரவி ரூ. 3,000த்தையும் எடுப்பு செய்தனர். மேற்கூறிய இனங்களை சரிகட்டும் முன் 2009ம் ஆண்டின் இலாபம் ரூ. 14,709 ஆக இருந்தது. இலாபம் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படும் என்பதை காட்டுக. மேலும் மாறும் முதல் முறையின் கீழ் கூட்டாளிகளின் முதல் கணக்கை காட்டுக.

17. The following is the Balance sheet of A and B as on 31st March 2013. C is admitted as a partner on that date :

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Capital A | 10,000 | Debtors | 11,000 |
| Capital B | 8,000 | Building | 8,000 |
| Creditors | 12,000 | Machinery | 10,000 |
| General reserve | 16,000 | Stock | 12,000 |
| Workmen Compensation fund | 4,000 | Cash at bank | 9,000 |
| | 50,000 | | 50,000 |

A and B shared profits in the ratio of 3 : 2. The following terms of admission are agreed upon:

(a) Revaluation of assets: Building Rs. 18,000, Stock Rs. 16,000.

(b) The liability on workmen compensation fund is determined at Rs. 2,000

(c) C brought in as his share of goodwill Rs. 10,000 his cash

(d) C was to bring further cash as would made his capital equal to 20% of the combined capitals of partners A and B (after adjustments are carried out).

(e) The future profit sharing ratio was A 2 : 2 : 1.

Prepare Revaluation account, partners capital account and the new balance sheet of the firm.

31.3.2013ல் உள்ள அ மற்றும் ஆ ஆகிய கூட்டாளிகளின் இருப்பு நிலைக்குறிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதே நாளில் அவர்கள் இ என்ற கூட்டாளியினை சேர்த்துக் கொண்டனர்.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| முதல் அ | 10,000 | கடனாளிகள் | 11,000 |
| ஆ | 8,000 | கட்டிடம் | 8,000 |
| கடனீந்தோர் | 12,000 | இயந்திரம் | 10,000 |
| பொதுகாப்பு | 16,000 | சரக்கிருப்பு | 12,000 |
| தொழிலாளர் இழப்பீட்டு நிதி | 4,000 | வங்கி ரொக்கம் | 9,000 |
| | 50,000 | | 50,000 |

அ மற்றும் ஆ என்ற கூட்டாளிகள் இலாபத்தினை 3 : 2 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். கூட்டாளிகள் சேர்க்கப்படும்பொழுது, கீழ்க்கண்ட நிபந்தனைகள் நடப்புக் கொள்ளப்பட்டன.

(அ) சொத்துக்களின் மறுமதிப்பீடு கட்டிடம் ரூ. 18,000 சரக்கு ரூ. 16,000

(ஆ) தொழிலாளர்கள் இழப்பீடு நிதிக்கான பொறுப்புகள் ரூ. 2,000 என நிர்ணயிக்கப்படுகிறது

(இ) இ நற்பெயரின் பங்காக ரூ. 10,000ஐ ரொக்கமாக கொண்டு வந்தார்.

(ஈ) (சரிகட்டலுக்குப் பின் உள்ள) அ மற்றும் ஆ ன் கூட்டு முதலில் 20% க்கு சமமான முதலை இ ரொக்கமாக கொண்டு வர வேண்டும்.

(உ) அ அவர்களுடைய எதிர்கால இலாப பகிர்வு விகிதம் 2 : 2 : 1.

மறு மதிப்பீட்டு கணக்கு, கூட்டாளிகள் முதல் கணக்குகள் மற்றும் கூட்டாளிகளின் புதிய இருப்பு நிலைக்குறிப்பு தயார் செய்க.

18. A, B, C were partners entitled to 1/2, 1/3 and 1/6 share of profit respectively.

Summary of their balance sheet on 31.12.1998 was as follows.

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Sundry creditors | 15,000 | Goodwill | 50,000 |
| Capital : A | 70,000 | Sundry assets | 60,000 |
| B | 50,000 | Cash | 55,000 |
| C | 30,000 | | |
| | 1,65,000 | | 1,65,000 |

The following steps were taken on 31st January 1999.

(a) C retired and his interest in firm was valued at Rs. 40,000 it was purchased by A and B from their private resources in their profit sharing proportion.

(b) D was admitted and become entitled to 1/6 share of profits on the condition that A and B should be credited in the profit ratio for goodwill amounting Rs. 30,000 he should bring in D capital equal to 1/5 of combined capital of A and B for adjustment. Prepare partners capital accounts and show the opening balance sheet of the reconstituted firm as 01.01.1999.

அ, ஆ. இ கூட்டாளிகள் 1/2, 1/3 மற்றும் 1/6 அன்று விகிதத்தில் இலாபத்தை பகிர்ந்து கொள்கின்றனர். 31.12.1998 இருப்பு நிலைக் குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 15,000 | நன்மதிப்பு | 50,000 |
| முதல் : A | 70,000 | பற்பல சொத்துக்கள் | 60,000 |
| B | 50,000 | ரொக்கம் | 55,000 |
| C | 30,000 | | |
| | 1,65,000 | | 1,65,000 |

கீழ்க்கண்ட நடவடிக்கைகள் ஜனவரி 1 , 1999 எடுக்கப்பட்டது.

(அ) இ ஓய்வு பெற்றார். அவருடைய பங்கு ரூ. 40,000 என மதிப்பிடப்பட்டு அ யும் ஆ யும் அப்பங்கை அவர்களுடைய லாபப் பகிர்வு முறையில் சொந்த நிதியிலிருந்து வாங்கப்பட்டது.

(ஆ) ஈ, 1/6 இலாப பங்கிற்கு கூட்டாளியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அ யும் ஆ யும் ரூ. 30,000 மதிப்புள்ள நன் மதிப்பை லாப விகிதப்படி பகிர்ந்து கொள்ள ஏற்கப்பட்டது. அ, ஆ யின் சரிகட்டப்பட்ட பின்னுள்ள முதலிற்கு 1/5 அளவிற்கு ஈ முதல் கொண்டு வர வேண்டும். கூட்டாளிகள் முதல் கணக்குகளையும் புதிய கூட்டாண்மையின் தொடக்க 01.01.1999 ன் இருப்பு நிலைக் குறிப்பையும் தருக.

19. Ajay, Arun and Ananth share profits in the ratio at 3 : 2 : 1 on 31.12.2006 their balance sheet was as follows :

| Liabilities | Amount (Rs.) | Assets | Amount (Rs.) |
|---|---|---|---|
| Creditors | 24,000 | Machinery | 50,000 |
| General Reserve | 6,000 | Stock | 22,000 |
| Capital : Ajay | 40,000 | Debtors | 19,000 |
| Capital : Arun | 30,000 | Goodwill | 26,000 |
| Capital : Ananth | 20,000 | Cash | 3,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

On the above date, the firm was dissolved. The assets except cash realised Rs. 1,20,000. The creditors were settled at Rs. 23,000. Dissolution expenses amounted to Rs. 1,600. Give necessary ledger accounts.

அஜய், அருண் மற்றும் ஆனந்த் என்பவரின் பங்கு இலாபம் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் பிரித்து அளிக்கப்படுகிறது. அவற்றின் 31.12.2006க்கான இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 24,000 | இயந்திரம் | 50,000 |
| பொதுகாப்பு | 6,000 | சரக்கு | 22,000 |
| முதல் : அஜய் | 40,000 | கடனாளிகள் | 19,000 |
| முதல் : அருண் | 30,000 | நற்பெயர் | 26,000 |
| முதல் : ஆனந்த் | 20,000 | ரொக்கம் | 3,000 |
| | 1,20,000 | | 1,20,000 |

மேற்கூறிய தேதியில் இந்த நிறுவனமானது நலிவுற்றது. சொத்து, ரொக்கத்தைத் தவிர ரூ. 1,20,000. கடனீந்தோருக்கு கொடுக்கப்பட்டது ரூ. 23,000. நிறுமக் கலைப்பு செலவு ரூ. 1,600. மேற்கூறியவற்றிற்கு பேரேட்டுக் கணக்கைத் தயார் செய்.

20. A, B and C are partners sharing Profit and Losses in the ratios 3: 4: 5. They decided to dissolve the partnership on 1st July 2006 and agreed that the sale of assets should not be forced but should be made gradually. As the realization was not likely to be completed for over a year. The partners wished the receipts from sales to be dealt with as and when received. The following was the Balance Sheet of the firm at the date of dissolution :

| Liabilities | Rs. | Assets | Rs. |
|---|---|---|---|
| Creditors | 10,000 | Sundry assets | 36,000 |
| B's loan account | 2,000 | | |
| Capital : | | | |
| A | 12,000 | | |
| B | 8,000 | | |
| C | 4,000 | | |
| | 36,000 | | 36,000 |

The net amount realized from the gradual sale of assets were as follows:

| | | |
|---|---|---|
| 1st instalment | - | Rs. 5,000 |
| 2nd instalment | - | Rs. 10,000 |
| 3rd instalment | - | Rs. 5,100 |
| 4th instalment | - | Rs. 6,300 |
| 5th instalment | - | Rs. 5,700 |

Draw up a detailed statement, showing the distribution of each instalment received.

A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் முறையே 3 : 4 : 5 என்ற விகிதத்தில் லாப நட்டங்களை பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் தங்கள் நிறுவனத்தை 01.07.2006 அன்று கலைக்க முடிவு செய்தனர். ஆனால் நிறுவனத்தின் சொத்துக்களை உடனடியாக விற்பனை செய்ய வேண்டாம் எனவும் படிப்படியாக விற்பது எனவும் முடிவு செய்தார்கள். சொத்துக்கள் விற்பது ஒரு வருடத்திற்குள் முடிவடையாதென்பதால் எப்பொழுதெல்லாம் அவைகள் விற்கப்படுகின்றனவோ, அப்பொழுது தொகை திரும்பப் பெற்றுக் கொள்வதாகவும் முடிவு செய்தனர்.

வியாபாரம் கலைக்கப்படும் பொழுது அதன் இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு :

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 10,000 | பற்பல சொத்துக்கள் | 36,000 |
| ஆ யின் கடன் க/கு | 2,000 | | |
| முதல் ; | | | |
| A | 12,000 | | |
| B | 8,000 | | |
| C | 4,000 | | |
| | 36,000 | | 36,000 |

படிப்படியாக சொத்துக்கள் விற்றதால் கிடைத்த ரொக்கத்தின் விபரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| முதல் தவணை | - | ரூ. 5,000 |
| இரண்டாம் தவணை | - | ரூ. 10,000 |
| மூன்றாம் தவணை | - | ரூ. 5,100 |
| நான்காம் தவணை | - | ரூ. 6,300 |
| ஐந்தாம் தவணை | - | ரூ. 5,700 |

ஒவ்வொரு தவணை ரொக்கத்தையும் பிரித்துக் கொடுப்பதற்கான ஒரு அறிக்கையைத் தயார் செய்க.

———————